## மார்ச் - 27

**"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்... ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாக இருக்கும் படிக்கும்... நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல் அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும் படிக்கும் வேண்டிக்கொள்கிறேன்."**

**-யோவா 17 : 20 - 23**

இது எப்படி ஆகும் என்று ஆச்சரியப்பட்டு நாம் விசாரிக்கிறோம். நமது கர்த்தராகிய இயேசு எப்பொழுதும் தமது தகப்பனோடு பூரணமாக இசைந்திருந்தார், அவருடைய சாயலை மகிமையாக பிரதிபலித்த ஒரு குமாரன். ஆனால் நமக்கு அந்த விதமாக இருந்ததில்லை. நாம் பாவிகளாயிருந்தோம். அன்புக்குத் தகுதியானதொன்றும் நம்மிடம் இருந்ததில்லை. ஆம் நாம் கழுவப்பட்டு, சுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். இன்னமும் நம்முடைய மண்பாண்டங்கள் எவ்வளவு அபூரணமானதாக இருந்தாலும் இருதயத்திலுள்ளதை அறியக்கூடியவரான அவருடைய பார்வையில் நம்முடைய இருதயங்கள் பூரணமாக இருக்கின்றன. மேலும் அவர் நம்மை பார்க்கிற பிரகாரமாக ஒரு பூரண இருதயத்தோடு அதாவது ஒரு பூரண நோக்கமும் சிந்தையும் கொண்ட இருதயத்தோடு நம்முடைய அபூரணமான மாம்சத்தின் பெலவீனங்களையும் குறைபாடுகளையும் சமாளிக்கக் கஷ்டப்பட்டு முயற்சி செய்து கொண்டும், வருத்தமுள்ளதாகிலும் உறுதி கொண்ட முயற்சியுடன் அவருடையச் சித்தத்தைச் செய்து, வீழ்ச்சியிலிருந்து நமது மீட்புக்காக அவர் ஏற்படுத்தியிருக்கிற பூர்வ நியமங்களில் தாழ்மையுடன் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கும் போதும், அவருடைய அன்புக்குத் தகுதியாக இருக்கும் அதை தேவன் நம்மில் காண்கிறார்.

**-Z ’03, 79(R 3160).**

பாக்கியமான கருத்து! கிறிஸ்துவின் உடன் சீஷர்களாக தேவகுமாரனின் அறிவிலும் விசுவாசத்திலும் ஒவ்வொருவரும் பூரணப்படுவதற்காக தேவனிடம் ஜெபிக்கும் கிறிஸ்துவின் பரிந்து பேசுதலின் கர்த்தருடைய ஜனங்கள் சந்தோஷப்படுகிறார்கள். இது ஆச்சரியத்தை உண்டாக்க அவசியமுமில்லை. ஏனெனில் ஒன்றாய் இருத்தலில் அடைகிற அவர்களுடைய பூர்த்தி அவர்கள் உலகத்தை விசுவாசத்துக்குக் கொண்டுவருவதை முந்த வேண்டும். அதனால், பிதாவானவர் யேசுவின் மீது வைத்த ஒரே விதமான அன்போடு தெரிந்து கொள்ளப்பட்டவர்களை நேசிக்கிறார் என்று உலகம் கண்டு கொள்ளும்.

**-P ’30, 30.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

2சாமு 1:26; சங் 133; யோவா 17:11; ரோம 12:5; 1கொரி 1:10; கலா 3:28; எபே 4:3-6; யோவா 14:11,20; 1யோவா 1:3; 3:24; கொலோ 2:2; 3:14; எபி 13:23; யோவா 12:26; 15:9; 16:27; எபே 2:4; 1யோவா 3:1,2.

**கோபுர வாசிப்பு** : Z ’13, 59 (R 5358).

**வினாக்கள்:** இந்த வாரத்தின் அனுபவங்களில் எது இந்த வசனத்தின் சத்தியத்தைக் காட்டியது? எப்படி? பலன் என்ன?